**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலன்– மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு வேலைவாய்ப்பில் 3% இட ஒதுக்கீடு வழங்குவதை கண்காணிக்க தலைமைச் செயலரின் தலைமையில் உயர்மட்டக் குழு அமைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.2)த் துறை

அரசாணை(நிலை) எண்.01 நாள்:02–01–2012

மார்கழி 17, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.117, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 27–08–2008.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கடிதம் எண்.7964/மா.தி.ந.3(1)/2011, நாள் 16.8.11.

-----

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மாற்றுத் திறனாளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 3% பணியிடங்களில் மாற்றுத் திறனாளிகள் நியமனம் செய்யப்படுவதை கண்காணிக்க உயர்மட்டக் குழு அமைத்து ஆணையிடப்பட்டுள்ளது.

2. 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஏனையவற்றுடன் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பின்வரும் அறிவிப்பினைச் செய்துள்ளார்கள்.

“அரசு வேலைவாய்ப்பில் மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று விழுக்காடு இட ஒதுக்கீட்டை உறுதி செய்யும். இதற்கென தலைமைச் செயலாளரின் கீழ் பல்துறை செயலாளர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்து, அனைத்து அரசுப் பணிகளிலும் மூன்று விழுக்காடு இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படுவதைக் கண்காணிக்கும். மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு தனியார் துறையில் பணியமர்த்தப்படும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.”

3. மேலே இரண்டில் படிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடிதத்தில் 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று விழுக்காடு இட அறிவிப்பினை செயல்படுத்தும் வண்ணம் மாற்றுத் திறனாளிகளுக்கு 3% இட ஒதுக்கீட்டை உறுதி செய்ய தலைமைச் செயலாளர் தலைமையில் ஒரு குழு அமைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை கவனமாக பரிசீலித்த அரசு மாற்றுத் திறனாளிகளுக்கு மூன்று சதவிகித இடஒதுக்கீட்டை உறுதி செய்ய தலைமைச் செயலர் தலைமையில் பின்வருமாறு குழு அமைத்து ஆணையிடுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | தலைமைச் செயலாளர். | தலைவர் |
| 2. | அரசுச் செயலாளர்,<br>மாற்றுத் திறனாளிகள் நலத் துறை. | உறுப்பினர் கூட்டுநர் |

| | | |
|---|---|---|
| 3. | அரசுச் செயலாளர்,<br>சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை. | உறுப்பினர் |
| 4. | அரசுச் செயலாளர்,<br>பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை. | உறுப்பினர் |
| 5. | அரசுச் செயலாளர்,<br>நிதித் துறை. | உறுப்பினர் |
| 6. | அரசுச் செயலாளர்,<br>உயர்கல்வித் துறை. | உறுப்பினர் |
| 7. | அரசுச் செயலாளர்,<br>பள்ளிக் கல்வித் துறை. | உறுப்பினர் |
| 8. | அரசுச் செயலாளர்,<br>ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. | உறுப்பினர் |
| 9. | அரசுச் செயலாளர்,<br>போக்குவரத்துத் துறை. | உறுப்பினர் |
| 10. | அரசச் செயலாளர்,<br>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. | உறுப்பினர் |
| 11. | அரசுச் செயலாளர்,<br>கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை. | உறுப்பினர் |
| 12. | அரசுச் செயலாளர்,<br>தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை. | உறுப்பினர் |
| 13. | செயலர்,<br>தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம். | உறுப்பினர் |
| 14. | தலைவர்,<br>ஆசிரியர் தேர்வு வாரியம். | உறுப்பினர் |
| 15. | மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர்,<br>மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரகம், சென்னை–78. | உறுப்பினர் |

5. இக்குழுவானது நான்கு மாதங்களுக்கு ஒருமுறை கூடி துறைகளில் மேற்கொள்ளப்பட்ட பணி நியமனங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கு 3% ஒதுக்கீடு அளிக்கப்பட்ட விவரங்கள் மற்றும் நிரப்பப்படாத காலிப் பணியிடங்களை முன்கொணர்தல் போன்றவற்றை ஆராய்ந்து அறிவுரைகள் வழங்கும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
அனைத்துத் துறைகள், தலைமைச் செயலகம், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகளுக்கானமாநில ஆணையர், சென்னை–78.
செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–6.
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், கல்லூரிச் சாலை, சென்னை–6.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.